**சுருக்கம்**

சிறிய நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்பகுதி அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம் (UIDSSMT) – மத்திய மற்றும் மாநில அரசின் பங்கான ரூபாய் **6385.46** இலட்சங்கள் (மத்திய அரசின் பங்கு ரூபாய். **5675.96** இலட்சங்கள் + மாநில அரசின் பங்கு ரூபாய். **709.50** இலட்சங்கள்) நிதியுதவி விடுவித்தல்–ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.2) துறை**

அரசாணை (பத்தாண்டு) எண்.**146**, நாள் **30.3.2007**

படிக்க:

தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், சென்னை, கடிதம் எண். TUFIDCO/UIDSSMT/GIT/ SHAE/AM(V), நாள் **22.3.2007.**

--------

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் **2006–2007** ஆம் ஆண்டிற்கு சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்பகுதி அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (UIDSSMT) கீழ் ஒப்பளிக்கப்பட்ட ஒருங்கிணைந்த குடிநீர் வடிகால் திட்டத்திற்காக மத்திய அரசு தனது முதல் தவணைப் பங்காக ரூபாய் **5675.96** இலட்சத்தினை கூடிய விரைவில் விடுவிக்கும் என்றும் அதற்கு இணையாக மாநில அரசின் பங்கான ரூபாய் **709.50** இலட்சங்களையும் சேர்த்து மொத்தம் ரூ.**6385.46** இலட்சத்தினை மேற்கண்ட திட்டச் செயல்பாட்டிற்காக விடுவிக்குமாறு தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார். இத்திட்டத்திற்கான நிதிப்பங்கீடு திட்ட மதிப்பீட்டில் மத்திய அரசு 80% மாநில அரசு **10**% (ம) உள்ளாட்சி அமைப்புகள் **10**% ஆகும். மேலும் மத்திய அரசு மற்றும் மாநில அரசின் பங்குத் தொகையை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(ரூபாய் இலட்சங்கள்)

| வ. எண். | உள்ளாட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு 100% | மத்திய அரசின் பங்கில் முதல் தவணை 25% of 80% | மாநில அரசின் பங்கில் முதல் தவணை 25% of 10% | மொத்தம் (மத்திய அரசு + மாநில அரசின் முதல் தவணைகள் |
|---|---|---|---|---|---|
| | **ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் திட்டம்** | | | | |
| **1.** | இராமநாதபுரம் | **4770.00** | **954.00** | **119.25** | **1073.25** |
| **2.** | பரமக்குடி | **5824.30** | **1164.86** | **145.60** | **1310.46** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | சிவகங்கை | 3279.90 | 655.98 | 82.00 | 737.98 |
| 4. | கீழக்கரை | 2015.50 | 403.10 | 50.39 | 453.49 |
| 5. | இராமேஸ்வரம் | 3376.50 | 675.30 | 84.41 | 759.71 |
| 6. | முதுகளத்தூர் | 1127.00 | 225.40 | 28.17 | 253.57 |
| 7. | மண்டபம் | 893.00 | 178.60 | 22.32 | 200.92 |
| 8. | சாயல்குடி | 853.60 | 170.72 | 21.34 | 192.06 |
| 9. | தொண்டி | 930.00 | 186.00 | 23.25 | 209.25 |
| 10. | ஆர்.எஸ்.மங்கலம் | 567.00 | 113.40 | 14.17 | 127.57 |
| 11. | கமுதி | 801.00 | 160.20 | 20.03 | 180.23 |
| 12. | அபிராமம் | 339.00 | 67.80 | 8.48 | 76.28 |
| 13. | திருப்பத்தூர் | 1447.00 | 289.40 | 36.16 | 325.58 |
| 14. | இளையங்குடி | 1121.00 | 224.20 | 28.03 | 252.23 |
| 15. | நெற்குப்பை | 31400 | 62.80 | 7.85 | 70.65 |
| 16. | பொன்னமராவதி | 721.00 | 144.20 | 18.03 | 162.23 |
| | **மொத்தம்** | **28379.80** | **5675.96** | **709.50** | **6385.46** |

2. மேலே பத்தி 1ல் காணும் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்றுக் கொண்டு மேற்கண்ட நகரங்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசின் பங்கான ரூபாய் 6385.46 இலட்சத்தினை விடுவித்து ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2ல் விடுவிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

“2217–நகர்ப்பகுதி வளர்ச்சி –05 ஏனைய நகர்ப்பகுதி வளர்ச்சி திட்டங்கள் –800. ஏனைய செலவு–பத்தாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–ஐஐ. மாநிலத் திட்டம் – துஆ – சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்பகுதி அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்–நகர்ப்புற அடிப்படை வசதி அளித்தல் – 09. உதவி மானியங்கள் – 03– குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்
(2217 – 05 – 800 – துஆ 0930)”.

4. மேலே பத்தி 2ல் விடுவிக்கப்பட்ட தொகையைப் பெற்று தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்க நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

5. மேலே விடுவிக்கப்படும் தொகையுடன் சேர்த்து ஆக மொத்தம் 2006–2007–ஆம் ஆண்டில் இதுவரையில் விடுவிக்கப்பட்ட தொகை ரூ.17314.56 இலட்சங்கள் ஆகும். 2006–2007–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் மேற்கண்ட திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.13365.00 இலட்சங்கள் ஆகும். எனவே, அதிகப்படியான தொகையான ரூ.3949.00 இலட்சங்கள் 2006–07–க்கான இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதியொதுக்கம் செய்யப்படும்.

6. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண்.20086/ஆஹறுளு/2007, நாள் 29.3.2007 ஒப்புதலின்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.தீனபந்து,

அரசுச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனர், சென்னை–35.

சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5

மாநில தலைமைக் கணக்கர், சென்னை–18

மாநில தலைமைக் கணக்கர்(தணிக்கை), சென்னை–18 (பெ.உ)

நகல்::

நிதி (நநி(ம)குவ) (வழிவகை–1/வ.செ.பொ)துறை, சென்னை–9

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்